


# 04.10.2026 செய்திகள்

## நாடு முழுவதும் எடுக்கப்பட்ட நீர்நிலைகள் கணக்கெடுப்பு

- நாட்டின் நீர்வளங்களை பாதுகாக்கவும், வறண்ட பகுதிகளை கண்டறிந்து எதிர்கால நீர் மேலாண்மை திட்டங்களை வகுக்கவும், மத்திய ஜல்சந்தி துறை, 2017-18ல் நீர்நிலைகள் கணக்கெடுப்புக்கான தரவுகளை சேகரித்து, 2023ல் அறிக்கையாக வெளியிட்டது.
- அதில், நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலைகள் எண்ணிக்கையை பெருக்கி, மஹாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- இதில் மிசோரம் மாநிலத்தில் மட்டும் நீர்நிலைகளின் எண்ணிக்கை, 63 சதவீத அளவுக்கு கடும்வீழ்ச்சி அடைந்துள்ளது.
- அருணாச்சலில், 50 சதவீத அளவுக்கு நீர்நிலைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

» தமிழகத்தின் நிலவரம்

- தமிழகத்தை பொறுத்தவரை கடந்த கணக்கெடுப்பின்போது, 1 லட்சத்து 6 ஆயிரத்து 957 ஆக இருந்த நீர்நிலைகளின் எண்ணிக்கை, இம்முறை 1 லட்சத்து 10 ஆயிரத்து 228 ஆக அதிகரித்துள்ளது.

| தமிழகத்தின் நீர் ஆதார நிலவரம் | | |
|---|---|---|
| மொத்த நீர்நிலைகள் எண்ணிக்கை | 1,10,228 | |
| பயன்பாட்டில் உள்ளவை | 92,875 | 84.26% |
| பயன்பாட்டில் இல்லாதவை | 17,353 | 15.74% |

## குஜராத் பொது சிவில் சட்ட மசோதா

» முக்கிய அம்சங்கள்

- குஜராத்தில் நடக்கும் அனைத்து திருமணங்களையும், 60 நாட்களுக்குள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். தவறினால் 10 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.
- வாழ்க்கைத் துணை உயிருடன் இருக்கும் போது, இரண்டாவது திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- விவாகரத்து பெறுவதில் அனைத்து மதத்தினருக்கும் பொதுவான விதிமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.
- திருமணம் செய்யாமல் இணைந்து வாழும், 'லிவ் இன்' உறவுகளை 30 நாட்களுக்குள் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்ய வேண்டும். உறவை முடிவுக்கு கொண்டு வரும் போதும் முறைப்படி அறிவிக்க வேண்டும்.
- லிவ் இன் உறவு குறித்து தவறான தகவல் அளித்தால், மூன்று மாதங்கள் வரை சிறை தண்டனை அல்லது 25 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.
- இந்த உறவின் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு சட்டப்பூர்வ முழு அங்கீகாரமும், உரிமைகளும் கிடைக்கும்.
- குடும்ப சொத்துக்கள் மற்றும் வாரிசுரிமைகளில் மகன்களுக்கு இணையான சமமான சட்டப்பூர்வ உரிமைகள் மகள்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.